**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.DVC.2/2022**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | தியாகராஜன் | Prosecution | RW1-Cross |
| Father Name | சதாசிவம் | Defence | |
| Village | வானகிரி | Taluk | சீர்காழி |
| District | மயிலாடுதுறை | Age | 41/2026 |

Solemnly affirmed by Tmt.R. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day 07.04.2026

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது.**

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கும் மனுதாரர் இலக்கியாவுக்கும் திருமணம் நடந்த பிறகு எங்கள் வீட்டில் தான் நாங்கள் குடித்தனம் செய்தோம் என்றால் சரிதான். எங்கள் திருமணம் நிச்சயிக்கப்பட்ட திருமணம் என்றால் சரிதான். இந்த வழக்கில் 5 ம் எதிர்மனுதார் திலகவதில் இளைய சகோதரி என்றால் சரிதான். என் அப்பா அம்மா என்ன வேலை செய்கிறார்கள் என்றால் விவசாய வேலை மற்றும் மளிகை கடை வைத்து வேலை செய்கிறார்கள். எங்களுக்கு எவ்வளவு ஏக்கர் இடம் உள்ளது என்றால் சுமார் 2 ஏக்கர் இடம் உள்ளது. நான் இருக்கும் வீட்டின் அளவு எவ்வளவு என்றால் 18 குழி அளவு உள்ளது. எனது வீடு ஓட்டுவீடு என்றால் சரிதான்.

எனது சகோதரி திலகவதிக்கு திருமணம் ஆகிவிட்டது என்றால் சரிதான். என் சகோதரிக்கு திருமணத்தின் போது எவ்வளவு நகை போட்டோம் என்றால் சுமார் 9 பவுன் நகைகள் போட்டோம் மற்றும் இருசக்கர வாகனம் மேலும் சீர்வரிசை ஜாமான்கள் செய்தோம். நான் திருமணம் ஆகி எவ்வளவு நாட்கள் கழித்து வெளிநாடு சென்றேன் என்றால் சுமார் 6 மாதம் கழித்து சென்றேன். நான் திருமணத்திற்கு முன்பு எங்கு வேலை செய்தேன் என்றால் வெளிநாட்டில் தான் வேலை

செய்தேன். நான் வெளிநாட்டில் என்ன வேலை செய்தேன் என்றால் கட்டுமான பணியில் வேலை செய்தேன். நான் வெளிநாட்டில் வேலை செய்த போது எவ்வளவு சம்பளம் வாங்கினேன் என்றால் முதலில் ரூ.22 ஆயிரம் வாங்கினேன். அதன் பிறகு இறுதியாக ரூ.55 ஆயிரம் வாங்கினேன். நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் மூன்றாவது பாராவில் திருமணத்தின் போது 8 பவுன் நகை செய்ததாகவும் அதன் பிறகு 10 பவுன் நகை வாங்கி போட்டடதாகவும் சொல்லும் நிலையில் அந்த நகை வாங்கிய ரசீதுகள் உள்ளதா என்றால் அவற்றை மனுதாரர் எடுத்து சென்றுவிட்டார். அவ்வாறு மனுதார் ரசீதுகளை எடுத்து சென்றுவிட்டதாக எனது முதல் விசாரணையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் மேற்படி நகைகள் மனுதாரருக்கு போட்டதாக சொல்லவது தவறு என்றாலும் அதில் உண்மை இருந்திருந்தால் நான் உரிய ஆவணங்களை தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் சரியல்ல. மனுதாரர் ரசீது எதுவும் எடுத்துசெல்லவில்லை என்றால் சரியல்ல.

எனக்கும் மனுதாரருக்கும் எந்த மண்டபத்தில் திருமணம் நடைபெற்றது என்றால் வானகிரியில் உள்ள தனலெட்சுமி திருமண மண்டபத்தில் திருமணம் நடைபெற்றது. திருமணத்தின் போது மனுதாரரின் பெற்றோர் அவருக்கு சீராக சீர்சாமான்கள், 40 பவுன் நகை போட்டார்கள் என்றால் சரியல்ல. மனுதாரர் கூறுவது போல் 40 பவுன் நகை மற்றும் சீர்வரிசை செய்தார்கள் என்றாலும் நானும் மற்ற எதிர்மனுதாரர்களும் சேர்ந்து கொண்டு கடனை அடைக்க பணம் தேவைப்படுவதாக சொல்லி அவற்றை பிடுங்கி கொண்டோம் என்றாலும் சரியல்ல. நான் வெளிநாட்டில் வேலை செய்த போது மனுதாரருக்கு ரூ.5 லட்சம் எவ்வகையில் வெளிநாட்டில் இருந்து அனுப்பி வைத்தேன் என்றால் எனது மற்றும் மனுதாரரது வங்கி கணக்கிற்கு அனுப்பி வைத்தேன். என்னுடைய வங்கி பாஸ் புத்தகமும் அப்போது அவர் வசம் தான் இருந்தது.

நான் அவ்வாறு பணம் அனுப்பி வைத்ததற்கு சான்றாக ஆவணம்

இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. உண்மையில் நான் வெளிநாடு சென்ற பிறகு மனுதாரருக்கு பணம் ஏதும் அனுப்பவில்லை என்றாலும் எனது பெற்றோர்களுக்குமட்டும் தான் அனுப்பினேன் என்றாலும் சரியல்ல. மனுதாரரின் மாமா என் வீட்டிற்கு வந்து செலவிற்கு பணம் வாங்கி செல்வது தவறு என்றால் சரியல்ல. மனுதாரரின் தந்தை என்னை கொலை மிரட்டல் விடுத்தாக நான் கூறும் நிலையில் அது தொடர்பாக காவல்நிலையத்தில் புகார் ஏதேனும்கொடுத்தேனா என்றால் இல்லை. உண்மையில் அவர் என்னை சேர்ந்து வாழ சொல்லி முயற்சிகள் செய்தார் என்றாலும் அவர் ஒரு போதும் என்னை மிரட்டியது கிடையாது என்றாலும் சரியல்ல. நான் திருமணம் ஆகி 6 மாதத்தில் வெளிநாடு சென்று எப்போது திரும்பினேன் என்றால் சுமார் 1.5 வருடங்கள் கழித்து திரும்பினேன். நான் திரும்பி வரும்போது மனுதார் என் வீட்டில் இல்லை என்றால் சரிதான். நான் வெளிநாடு சென்ற உடன் என் வீட்டில் உள்ள மற்ற எதிர்மனுதாரர்கள் சேர்ந்து அவருக்கு உணவு தண்ணீர் ஆகியவை கொடுக்காமல் வீட்டை விட்டு விரட்டினார்கள் என்றால் சரியல்ல. அந்த கொடுமை பற்றி மனுதாரர் என்னிடம் தெரிவித்த போது நான் அவருக்கு சாதகமாக எதுவும் பேசவில்லை என்றால் சரியல்ல. நான் வெளிநாட்டில் இருந்து வந்த பிறகு சமாதானம் பேசப்பட்டு ஒன்றாக குடும்பம் நடத்தினோம் என்றால் சரிதான். அதன் பிறகு தான் முதல் குழந்தை நிஷ்நிதா பிறந்தது என்றால் சரிதான்.

அதன் பிறகு நான் எப்போது மீண்டும் வெளிநாடு சென்றேன் என்றால் 1 வருடம் கழித்து சென்றேன். நான் வெளிநாடு சென்ற பிறகு என் வீட்டினை சேர்ந்த எதிர்மனுதார்கள் சேர்ந்து அவரை வீட்டை விட்டு விரட்டிவிட முயற்சித்தார்கள் என்றால் சரியல்ல. அந்த சமயம் மனுதாரரை வீட்டை விட்டு வெளியேற்ற முடியாத காரணத்தினால் தண்ணீர் வசதி, சாக்கடை வசதி ஆகியவற்றை துண்டித்து அவரை கொடுமைக்கு உள்ளாக்கினார் என்றால் சரியல்ல. அதன் பிறகும் எதிர்மனுதாரர்கள் அனைவரும் சேர்ந்து மனுதாரரை அடித்து

விரட்டினார்கள் என்றால் சரியல்ல. அதன் பிறகு நான் மீண்டும் ஊருக்கு எப்போது வந்தேன் என்றால் 2 வருடங்கள் கழித்து வந்தேன். அப்போது நான் வந்த போது மனுதாரரும் என் குழந்தையும் அந்த வீட்டில் இல்லை என்றால் அங்கு தான் இருந்தார்கள்.

நான் வெளிநாட்டில் இருந்த போது எனது பெற்றோர்கள் மனுதாரரை அடித்து விரட்டிவிட்டார்கள் என்றாலும் நான் வந்த பிறகு சமாதானம்பேசப்பட்டு சேர்ந்து வாழ்ந்தோம் என்றாலும் சரியல்ல. நாங்கள் மீண்டும் சேர்ந்து வாழந்த பிறகு தான் 2 வது குழந்தை பிறந்தது என்றால் நான் வெளிநாடு சென்றுவிட்டு வந்த பிறகு சேர்ந்து வாழ்ந்த போது 2வது குழந்தை பிறந்தது. நான் எனது பிராமான பத்திரிக்கையில் 10 வது பத்தியில் குழந்தைகளின் எதிர்கால நலனை கருத்தில் கொண்டு மனுதாரருடன் சேர்ந்து வாழ தயாராக உள்ளேன் என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். நான் சீர்காழீ சார்பு நீதிமன்றத்தில் விவாகரத்து கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கு எண். HMOP.91/2025 என்றால் சரிதான். அதனால் எனது பிரமாண வாக்குமூலத்தில் மனுதாரரோடு சேர்ந்து வாழ தயாராக உள்ளதாக கூறினால் ஜீவனாம்ச தொகை செலுத்த தேவையில்லை என்று கருதி வழக்கிற்காக பொய் சொல்லிவிட்டு மறுபுறம் வேறு நீதிமன்றத்தில் விவாகரத்து வழக்கை நடத்தி வருகிறேன் என்றால் இந்த வழக்கு நடந்து கொண்டிருக்கும் போது சமாதானம் பேசப்பட்ட போது மனுதாரர் அதற்கு உடன் படவில்லை. 'எனக்கு தேவை ஜீவனாம்சம் மட்டும் தான், எதுவாக இருந்தாலும் நான் வழக்கிலேயே பார்த்துக்கொள்கிறேன்' என்று சொல்லி என்னோடு சேர்ந்து வாழ மறுத்துவிட்டார். ஆகவே அதன் பிறகு தான் நான் விவாகரத்து வழக்கை தாக்கல் செய்தேன்.

மனுதாரர் மேற்படி விவாகரத்து வழக்கில் எதிருரை தாக்கல் செய்துள்ளார் என்றாலும் அதில் எனது விவாகரத்து மனுவை தள்ளுபடி செய்ய கோரியுள்ளார் என்றாலும் சரியல்ல. தற்போதும் மனுதாரர் என்னோடு வாழ தயாராக உள்ளார் என்றாலும் நான் தான் சேர்ந்து

வாழாமல் மறுக்கிறேன் என்றாலும் சரியல்ல. நானும் சேர்ந்து வாழ தயாராக தான் உள்ளேன். நான் வட்டார கல்வி அலுவகத்தில் தகவல் கேட்டு விண்ணப்பித்துள்ள நிலையில் அந்த பதிலில் மனுதாரர் எங்கு வேலை செய்கிறார் என்கிற விபரம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் அந்த பதிலை எதிர்த்து மேல் முறையீடு செய்யவில்லை என்றால் சரிதான். மனுதாரர் எந்த வேலையும் செய்யவில்லை என்றாலும் அவரின் படிப்பு சான்றிதழ் என்னிடம் தான் உள்ளது என்றாலும் சரியல்ல. அவர் வேலை செய்து வருகிறார்.

மனுதாரர் வேலை செய்து 70 ஆயிரம் சம்பளம் வாங்குவதாக நானாக தோராயமாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல அவரது உறவினர் ஒருவர் தான் கூறினார். உண்மையில் மனுதாரர் வேலைக்கு செல்லவில்லை என்றாலும் வருமாணம் ஈட்டவில்லை என்றாலும் சரியல்ல. எனக்கு மூக்கின் வழியாக என்டோஸ்கோப்பி மூலம் நீர் எடுத்தார்கள் என்றால் சரிதான். அதனை சென்னையில் உள்ள அரசாங்க மருத்துவ மனையில் செய்தார்கள். அதன் பிறகு நான் திரும்பவும் பரிசோதனைக்கு சென்றேன் என்றால் சரிதான். அப்படி சென்ற போது எனக்கு மூக்கில் நீர் வடிவது செவித்திறன்,ஆகியவை அனைத்தும் நன்றாக உள்ளதாக சான்று அளித்தார்கள் என்றால் சான்று அளிக்கவில்லை . நான் அடுத்த மாதம் மீண்டும் பரிசோதணைக்கு செல்லவேண்டும். நான் தாக்கல் செய்துள்ள மருத்துவர் அறிக்கையிலேயே நான் பரிபூரணமாக குணமாகிவிட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் தற்போது மாதம் மாதம் ரூ.5000/- க்கு மருந்து வாங்குவதற்கு ஆதாரமாக ரசீதுகள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனக்கு மருத்துவ செலவு என எதும் கிடையாது என்றாலும் பூரணமாக குணமடைந்துவிட்டேன் என்றாலும் சரியல்ல. மனுதாரரை அடித்து விரட்டியதாக சொல்லி என் மீதும், என் குடும்பத்தார் மீதும் பூம்புகார் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அது பொய்புகார் ஆகும். மனுதாரரை கட்டி வைத்து அடித்து, அவர் வீட்டில் துாக்கி

போட்டுவிட்டு போனதாக ஆணைக்காரன்சத்திரம் காவல் நிலையத்தில் அவர் புகார் கொடுத்துள்ளார்என்றால் சரிதான் அதுவும் பொய்புகார் தான்.

மேற்படி இரு புகாரிலும் உண்மை இருப்பதால் தான்போலிசார் என் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார்கள் என்றால் அவ்வாறு வழக்கு பதிவு வழக்கு பதிவு செய்யப்பட்டது உண்மை தான். ஆனால் அது பொய்புகார் ஆகும். அந்த அறிக்கைகள் வாசாஆ.2 மற்றும் வாசாஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலத்தில் மனுதாரர் பெற்ற கடனை நான் அடைப்பதாக சொல்லும் நிலையில் யாரிடம் பெற்றார் என்பது பற்றி நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட வில்லை என்றால் சரிதான். மனுதாரர் சுமதி, காமாச்சி, சர்மிளா ஆகியோரிடம் கடன் வாங்கியிருந்தார் . நான் தற்போது வரை அதை அடைத்து வருகிறேன். மேற்படி நபர்கள் யார் என்றே மனுதாரருக்கு தெரியாது என்றாலும் அவர் அவர்களிடம் கடன் வாங்கவில்லை என்றாலும் சரியல்ல.

எனது எதிருரை, முதல் விசாரணை, ஆகியவற்றில் மனுதாரருக்கு எதிராக சொல்லயுள்ள குற்ற சாட்டுகள் பொய் என்றால் சரியல்ல. நான் தற்போது ஓட்டுநராக வேலை செய்கிறேன் என்றால் ஆமாம். என் அப்பா அம்மா விவசாயம் மற்றும் மளிகை கடை வைத்து சம்பாதிக்கிறார்கள் என்றாலும் நானும் சம்பாதிக்கும் நிலையில் மனுதாரர் மற்றும் குழந்தைகளுக்கு ஜீவனாம்சம் வழங்க எனக்கு முழுத்தகுதி உள்ளது என்றாலும் சரியல்ல. எனக்கு வருமாணம் அதிகமாக உள்ளதால் நான் இரண்டாவது திருணத்திற்கு தயாராகிவிட்டேன் என்றாலும் அதனால் தான் விவாகரத்து கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன்எ ன்றாலும் சரியல்ல. மனுதாரர்கள் எனது சட்டபூர்வமான மனைவி மற்றும் குழந்தை என்றால் சரிதான். ஆகவே அவர்களை பராமரிக்கும் சட்டப்படியான கடமை எனக்கு உண்டு என்றால் உண்டு. எனது வருமாணத்திற்கு தகுந்த படிதான் எனது பிள்ளைகளை படிக்க வைக்க முடியும். இந்த நீதிமன்றத்தில் ரூ.8000/- இடைக்கால ஜீவனாம்சம் கொடுக்க வேண்டும் என்று உத்தரவாகியுள்ளது என்றால் சரிதான். நான் மேற்படி

உத்தரவை மதிக்கவில்லை என்றால் தவறு. இன்றைய தேதியில் என்னால் மேற்படி தொகை செலுத்த இயலவில்லை. மேற்படி தொகை செலுத்த முடியாதது காரணமாக மேல்முறையீடு செய்துள்ளேனா என்றால் இல்லை. என்னால் முடிந்த பணத்தை கொடுத்துள்ளேன்.

எனக்கு அந்த பணம் கொடுக்க முழுத்தகுதி உண்டு என்றாலும் அவரை பழி வாங்குவதற்காக கொடுக்க மறுக்கிறேன் என்றாலும் சரியல்ல. மனுதாரரை வீட்டில் இருந்து அடித்து விரட்டி அவரின் கல்வி சான்றிதழ் மற்றும் ஆவணங்களை கொடுக்க மறுக்கிறேன் என்றால் சரியல்ல. மனுதாரரின் சீர்வரிசை பொருட்கள், நகைகள் அனைத்தும் என் வசம் தான் உள்ளது என்றால் ஒரு கட்டில், பீரோ, பிரிச், ரூ.15000/– மதிப்புள்ள பாத்திரம் ஆகியவை மட்டும் தான் உள்ளது. நான் மனுதாரரை அளவுக்கு அதிகமாக கொடுமை படுத்தியதால் அவர் பாதிக்கப்பட்டுள்ளார் என்றாலும் அதற்கு இழப்பீடு கொடுக்க நான் கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. (சாட்சி தன்னால் இந்த சமூகத்தில் மேற்கொண்டு வாழ முடியாது என்றும் தான் தற்கொலை செய்து கொள்ள இருப்பதாகவும் தெரிவித்தார். அதற்கு நீதிமன்றம் அவருக்கு தகுந்த அறிவுரை வழங்கியது.)

இந்த வழக்கில் நான் எடுத்திருக்கும் பொய்யான எதிர்வாதங்கள் ஏற்கதக்கதல்ல என்றால் சரியல்ல. மனுதாரருக்கு நான் கணவர் என்கிற முறையில் அவர் கூறியுள்ள பரிகாரம் அனைத்தும் சட்டத்தில் கிடைக்க இடம் உண்டு என்றாலும் மனுதாரரின் மனு ஏற்றுக்கொள்ளதக்கது என்றாலும் சரியல்ல.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது.**

**மறுவிசாரணை இல்லை.**